


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி

NAMADHU DHINA KANI


www.dhinakani.com

காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 332 | 4 Pages | 27.6.2025 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 02 | இதழ்: 332 | 4 பக்கங்கள் | 27.6.2025 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேல்**

**செல்லா துயிருண்ணுங் கூற்று**

**விளக்கம்:**

**கொல்லாத அறத்தை மேற்கொண்டு நடக்கின்றவனுடைய வாழ்நாளின்மேல், உயிரைக்கொண்டு செல்லும் கூற்றுவனும் செல்லமாட்டான்.**

# மத்திய அரசால் கூட தமிழ்நாட்டின் வளர்ச்சியை மறைக்க முடியவில்லை: முதல்வர் மு.க.ஸ்டாலின்

திருப்பத்தூர், ஜூன் 27

தஞ்சாவூரில் நடைபெறும் அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக சென்றுள்ள முதல்அமைச்சர், நேற்று மாலை கல்லணையை திறந்து வைத்தார். தொடர்ந்து இரண்டாவது நாளாக இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகிறார்.

இந்நிலையில் திருப்பத்தூரில் நடைபெற்ற விழாவில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

காட்பாடிக்கு ரெயிலில் வந்திறங்கியதில் இருந்து மக்களின் வரவேற்பில் மனம் நிறைந்துவிட்டது. வேலூரில் 5 மணிக்கு தொடங்கி, திருப்பத்தூருக்கு 11 மணிக்கு வந்து சேர்ந்தோம். திமுக தொண்டர்கள் வரவேற்போடு, பெண்கள், மாணவர்கள், விவசாயிகள் பொது மக்கள் என பல தரப்பினரும் வரவேற்பு அளித்தனர்.

2026 மட்டுமல்ல, 2031, 2036 என எப்போது இருந்தாலும் நாம் தான் என்பதை வரவேற்பு காட்டியிருக்கிறது. பொறுப்பில் உள்ள துறை மட்டுமல்ல, மாவட்டத்தையும் சிறப்பாக வளர்த்துள்ளார் அமைச்சர் எ.வ.வேலு.

ஆம்பூர் பிரியாணி, சந்தனக்காடு உள்ளிட்ட பல்வேறு சிறப்புகளை கொண்ட மாவட்டம் திருப்பத்தூர். கடந்த கால ஆட்சியாளர்களால் சீரழிந்த நாட்டை, வரலாறு காணாத வளர்ச்சிக்கு கொண்டு சென்றுள்ளோம், பல்வேறு திட்டங்களை செய்துள்ளோம்... செய்து கொண்டே இருப்போம்

இந்தியாவின் ஜிடிபியில் தமிழகத்தின் பங்கு 9.21 விழுக்காடு. தலைநகரை மட்டும் வளர்க்கவில்லை, அனைத்து நகரங்களையும் வளர்த்துள்ளோம்

திருப்பத்தூரில் 14 பாலங்கள் கட்டப்பட்டுள்ளன, 211 கோவில்களுக்கு குடமுழுக்கு நடத்தியுள்ளோம். நாட்றம்பள்ளியில் தோல் அல்லாத காலணி பூங்கா அமைக்கப்பட உள்ளது.

தமிழ்நாட்டுக்கு ஓர வஞ்சனை செய்கிற மத்திய அரசால் கூட தமிழ் நாட்டின் வளர்ச்சியை மறைக்க முடியவில்லை. பொருளாதார வளர்ச்சியில் 9.69 சதவீதம் உடன் மற்ற மாநிலங்களை விட தமிழ்நாடு புதிய உச்சம் பெற்றுள்ளதாக மத்திய அரசே கூறியுள்ளது



நாட்டின் மொத்த வளர்ச்சியில் சுமார் 10 சதவீதம் பங்களிப்பு தமிழ்நாடு உடையது. தொழிற்சாலை நிறைந்த மாநிலமாக உருவாகி வருகிறது தமிழ்நாடு.

தமிழ்நாட்டை மதத்தால், சாதியால் பிளவுபடுத்த பாஜகவினர் தொடர்ந்து முயற்சி செய்கிறார்கள். மக்களை பற்றி கவலைப்படாமல் மதத்தை பற்றி கவலைப்படுகிறார்கள். மிஸ்டு கால் தந்தும் கட்சியை வளர்க்க முடியாததால் அரசியல் லாபத்திற்காக கடவுளை மிஸ்யூஸ் செய்கிறார்கள்

பிரதமர் மோடி பெயரில் வீடு கட்டித் தரும் திட்டம் ஒன்று உள்ளது. ஒரு வீடு கட்ட ரூ.1.20 லட்சம் தராங்க. இந்த காசுல வீடு கட்ட முடியுமா? அதுலயும் ரூ.72,000 மட்டும்தான் மத்திய அரசு தருது. மீதி கூடுதலாக ரூ.1.62 லட்சம் மாநில அரசு கொடுத்து வீடு கட்டித் தருகிறோம். பெயர்தான் அவங்களோடது. நிதி நம்முடையது.

அதனாலதான் ஏற்கனவே நான் ஒரு டயலாக் சொன்னேன். மாப்பிள்ளை அவருதான். ஆனா அவரு போட்டிருக்கிற சட்டை என்னோடது

இவ்வாறு அவர் கூறினார்.

தனைத் தொடர்ந்து திருப்பத்தூருக்கு 5 புதிய அறிவிப்புகளை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். இதன்படி

1. குமாரமங்கலத்தில் ரூ.6 கோடியில் துணை மின்நிலையம் அமைக்கப்படும்.

2. ஆம்பூர் பகுதியில் புதிய நூலக கட்டிடம் அமைக்கப்படும்.

3. 5,000 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் வகையில் நல்ல குண்டா பகுதியில் ரூ.200 கோடி மதிப்பில் சிப்காட் அமைக்கப்படும்.

4. ஆலங்காயம் ஊராட்சி நெக்னாமலை பகுதியில் ரூ.30 கோடி மதிப்பில் 7 கிமீக்கு சாலை அமைக்கப்படும்.

5. திருப்பத்தூர் பழைய பேருந்து நிலையம் அமைந்துள்ள இடத்தில் ரூ.18 கோடி மதிப்பில் அடுக்கு மாடி வணிக வளாகம் அமைக்கப்படும் என்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

முன்னதாக வேலூர் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் அரசு விழாக்களில் கலந்து கொள்வதற்காக நேற்று (25.6.2025) சென்னை, சென்டிரல் ரெயில் நிலையத்திலிருந்து வேலூர் புறப்பட்டுச் சென்ற தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு காட்பாடி ரெயில் நிலையத்தில்,அமைச்சர்ள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

பின்னர், வேலூர், அரசு பென்ட்லேண்ட் மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்ற விழாவில், தரை மற்றும் ஏழு தளங்களுடன் 197 கோடியே 81 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அரசு வேலூர் பல்நோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை மற்றும் வேலூர் மாவட்டத்தில் 7 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 7 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கூடுதல் கட்டடங்கள் மற்றும் 2 துணை சுகாதார நிலையங்களுக்கான புதிய கட்டடங்களை தமிழ்நாடு முதல்அமைச்சர் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, வேலூர் மாவட்ட வருவாய் வட்டங்களுக்குட்பட்ட கிராமங்களில் ஆட்சேபனையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் வீடு கட்டி வசித்து வரும் நபர்களுக்கு ஒருமுறை சிறப்பு வரன்முறை திட்டத்தின் கீழ் மற்றும் பல்வேறு திட்டங்களின் கீழ், நிலங்களை வரன்முறை செய்து 21,776 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் முதல் அமைச்சர் வழங்கினார்.

பின்னர், வேலூர் மாவட்டம், பூஞரில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் கட்டப்பட்டுள்ள வீடுகளை தமிழ்நாடு முதல்அமைச்சர் பார்வையிட்டு ஆய்வு செய்து, பயனாளிகளிடம் கலந்துரையாடி, அவர்களது தேவைகள் குறித்து கேட்டறிந்தார்.

அதன் தொடர்ச்சியாக, இன்றையதினம் (26.6.2025) தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின், திருப்பத்தூர் மாவட்டம், மண்டலவாடியில் நடைபெற்ற அரசு விழாவில், 174 கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் 90 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 68 கோடியே 76 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 60 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 273 கோடியே 83 லட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை 1,00,168 பயனாளிகளுக்கு வழங்கினார்.

## இமாச்சலபிரதேசம் திடீர் வெள்ளம்: 2 பேர் பலி



டேராடூன், ஜூன்.27

மேகவெடிப்பு காரணமாக இமாச்சலபிரதேச மாநிலம் கங்ரா மற்றும் குல்லு ஆகிய மாவட்டங்களில் இன்று கனமழை பெய்தது. கனமழையால் ஆற்றில் திடீரென வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இந்நிலையில், இந்த திடீர் வெள்ளத்தில் சிக்கி 2 பேர் உயிரிழந்தனர். மேலும், 10 பேர் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டுள்ளனர்.

இதையடுத்து வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டவர்களை தேடும் பணியில் பேரிடம் மீட்புக்குழுவினர் களமிறக்கப்பட்டுள்ளனர். இந்த வெள்ளப்பெருக்கால்ம் கங்ரா மாவட்டத்தில் உள்ள கன்யாரா கிராமம் அதிக பாதிப்பை சந்தித்துள்ளது. மேகவெடிப்பால் கனமழையுடன், திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ள நிகழ்வு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## சொர்க்கத்தை காட்டுகிறேன் என கூறி.. இளம்பெண்ணை அழைத்து தனியார் ஊழியர் செய்த விபரீத செயல்

ஜெய்ப்பூர், ஜூன் 27

பிரான்ஸ் நாட்டை சேர்ந்த இளம்பெண் ஒருவர் இந்தியாவிற்கு சுற்றுலா வந்துள்ளார். இவருக்கு வயது 30. இவர் டெல்லியில் இருந்து ராஜஸ்தானின் உதய்ப்பூருக்கு பஸ்சில் வந்து இறங்கினார். உதய்ப்பூரில் உள்ள ஹோட்டலில் தனது நண்பர்களுடன் தங்கினார். இரவு நேரம் நெருங்கியது. அந்த பிரான்ஸ் பெண், நண்பர்களுடன் சேர்ந்து இரவு உணவு சாப்பிட சென்றார். அப்போது ஹோட்டலில் நடந்த பார்ட்டியின்போது தனியார் ஊழியர் ஒருவர் பிரான்ஸ் பெண்ணிடம் பேச்சு கொடுத்துள்ளார்.

அப்போது தாம் ஒரு பெரிய தனியார் நிறுவனத்தில் பணியாற்றுவதாக கூறினார். இதையடுத்து பிரான்ஸ் பெண் சகஜமாக அவரிடம் பேசியுள்ளார். இந்த வேளையில் அந்த நபர், □□ வாங்க வெளியே போய் ஒரு தம் அடிக்கலாம். உங்களுக்கு இன்னொரு அழகான சொர்க்கத்தை காட்டுகிறேன்'' எனக்கூறியுள்ளார். அவர் அந்த பகுதியில் உள்ள பணிபுரியும் ஒரு தனியார் நிறுவனர் ஊழியர் தானே அவருக்கு நிறைய இடம்தெரியும் என்று பிரான்ஸ் பெண் சுற்றுலா பயணி நினைத்தார். இதையடுத்து அவரும் நம்பி அவருடன் சென்றார். இருவரும் காரில் ஒன்றாக சென்றனர்.

அப்போது அந்த நபர்தான் வசித்து வரும் வீட்டிற்கு அழைத்து சென்று அந்த பெண்ணை வலுக்கட்டாயமாக பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். ஒருவழியாக போராடி அந்த நபரிடம் இருந்து தப்பிய அந்த பிரான்ஸ் பெண் மீண்டும் ஹோட்டலுக்கு வந்து நடந்த சம்பவத்தைதனது தோழிகளிடம் கூறிகதறி அழுதுள்ளார். இதையடுத்து அவரை தோழிகள் மருத்துவமனையில் அனுமதித்தனர். மருத்துவமனைக்கு சென்ற போலீசிடம் பிரான்ஸ் பெண் புகாரளித்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

முதற்கட்ட விசாரணையில், அந்த பெண்ணை ஏமாற்றி பாலியல் பலாத்காரம் செய்த நபர் சித்தார்த் என்று போலீசார் அடையாளம் கண்டுள்ளனர். தற்போது அவர் தலைமைறவாகி உள்ளார். அவரை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர். இதற்கிடையே தான் அந்த பெண் அளித்த புகார் பற்றி திடுக்கிடும் தகவல் வெளியாகி உள்ளது.

அதில் அவர் கூறியதாவது:

டெல்லியில் இருந்து பஸ்சில் உதய்ப்பூருக்கு வந்தேன். இங்கு ஓய்வில் இருந்தேன். இரவில் எனது நண்பர்களுடன் இரவு உணவு சாப்பிட சென்றேன். அப்போது எங்களின் டேபிள் அருகே ஒருவர் வந்து சிகரெட் புகைக்க அழைத்தார்.

அழகான சொர்க்கத்தை காட்டுவதாக கூறினார். காரில் என்னை அழைத்து சென்றார். எனக்கு சிறிது சந்தேகம் வந்தது. இதனால் ஹோட்டலில் விடும்படி அவரிடம் கூறினேன். ஆனால் அவர் அதனை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. அவரது வீட்டிற்கு என்னை அழைத்து சென்றார். அங்கு கட்டிப்பிடிக்கும்படி கூறினார். நான் மறுத்தேன். அவர் என்னிடம் தவறாக நடக்க முயன்றார். என் செல்போனில் சார்ஜ் இல்லை. நிலைமையை சமாளித்தபடியே அவரிடம் செல்போன் சார்ஜ் செய்ய சார்ஜர் கேட்டேன். ஆனால் அவர் மறுத்துவிட்டார். இதனால் என்னால் யாரையும் தொடர்பு கொள்ள முடியவில்லை. இதற்கிடையே என்னை கட்டிப்பிடித்தார். நான் துடிதுடித்துபோனேன். அவரது கோரப் பிடியில் இருந்து தப்பிக்க முயன்றேன். என்னால்முடியவில்லை. கதறிஅழுதேன். ஹோட்டலுக்கு என்னை அழைத்து செல்ல கெஞ்சி அழுதேன். ஆனால் அந்த நபர் என்னை வலுக்கட்டாயமாக பலாத்காரம் செய்தார். அதன்பிறகு அதிகாலை 6 மணிக்கு என்னை ஹோட்டலில் கொண்டு வந்து விட்டு சென்றார்' என்று கண்ணீர் மல்க கூறியிருந்தார்.

இதுபற்றி உதய்ப்பூர் எஸ்பி யோகேஷ் கோயல் கூறுகையில்,

பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு மருத்துவ சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவரிடம் விசாரணைநடத்திதகவல்களை பெற்றுக்கொண்டோம். சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். குற்றச்சாட்டுக்கு உள்ளான நபரை கைது செய்துள்ளனர். அவரிடம் தீவிரவிசாரணைநடத்திவருவதாகபோலீசார்தரப்பில்கூறப்பட்டுள்ளது என்றார்.

## ஆசிரியர் மீது தாக்குதல்: சட்டம் ஒழுங்கு குப் பைக் கிடங்குக்கு சென்றுவிட்டது அண்ணாமலை

சென்னை, ஜூன் 27

முன்னாள் பாஜக மாநில தலைவர் அண்ணாமலை தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

"திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் அருகே உள்ள காரத்தொழுவு அரசு உயர்நிலைப் பள்ளி அருகே, மது அருந்திய கும்பலைத் தட்டிக் கேட்ட அரசுப் பள்ளி ஆசிரியர் குலாம் தஸ்தகீர் அவர்கள் மீது, போதைக் கும்பல், பெட்ரோல் ஊற்றி தாக்குதல் நடத்தியிருக்கிறது.

பொது இடங்களில் மது அருந்துபவர்கள் மீது எந்த நடவடிக்கையும்எடுக்காமல்,மதுவிற்பனையில் பணம் வந்தால் போதும் என்ற திமுக அரசின் கட்டுப்பாடற்ற மது விற்பனையின் விளைவு, அரசுப் பள்ளிக்குள் நுழைந்து ஆசிரியர் மீது தாக்குதல் நடத்தும் அளவுக்குச் சென்றிருக்கிறது. அரசு அதிகாரிகள், காவல்துறையினர், பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என திமுக ஆட்சியின் கையாலாகாத்தனத்தால், யாருக்குமே பாதுகாப்பில்லை. அரசுப் பள்ளியின் உள்ளே நுழைந்து, ஆசிரியர் மீது பெட்ரோல் ஊற்றி தாக்குதல் நடத்த முடிகிறது என்றால், திமுக ஆட்சியில், சட்டம் ஒழுங்கு குப்பைக் கிடங்குக்கு சென்று விட்டது என்பதுதான் பொருள். ஆனால், இது எவை குறித்தும் கவலை இல்லாமல், நாளொரு வேஷமும், பொழுதொரு நாடகமும் நடத்திக் கொண்டிருக்கும் முதலமைச்சர் மு.க .ஸ்டாலின் முழு நேரமாக நடிக்கச் செல்லலாம். ஆசிரியர் மீதான பெட்ரோல் தாக்குதல், கொலைமுயற்சியாகவே கருதப் பட வேண்டும். உடனடியாக, அந்த சமூக விரோதிகளை கைது செய்து கடும் நடவடிக்கை எடுப்பதோடு, பொது இடங்களில் மது அருந்தப்படுவதைத் தடுக்க, ஒவ்வொரு ஊரிலும் காவல்துறை கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் திமுக அரசை வலியுறுத்துகிறேன்." இவ்வாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## விழுப்புரத்தில் சமுதாய நலக்கூடம் பாழ் பொதுமக்கள் குற்றச்சாட்டு

விழுப்புரம் அருகே தந்தை பெரியார் நகரில் பழுதடைந்து, நீண்ட காலமாக மூடி கிடக்கும் சமுதாய கூடம் பாழாகி வரும் நிலையில் சமூக விரோதிகளின் கூடாரமாக மாறி வரும் அவல நிலை ஏற்பட்டு வருகிறது என அப்பகுதி மக்கள் மத்தியில் குற்றச்சாட்டு எழுந்து வருகிறது

விழுப்புரம் அரசு போக் குவரத்து கழகத்தில் பணியாற்றும் அலுவலர்கள், ஊழியர்களுக்காக, தந்தை பெரியார் நகரில் கடந்த 1995 ஆண்டு அரசு போக்குவரத்து கழகம் சார்பில் புதிய சமுதாய கூடம் கட்டி உள்ளனர்.

இரண்டு தளங்களுடன் கட்டப்பட்ட அந்த சமுதாய கூடத்திற்கு, தந்தை பெரியார் அரசு போக்குவரத்து கழக சமுதாய கூடம் என்று பெயரிட்டு அப்போதைய போக்குவரத்து துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் திறந்து வைத்தார்.



விழுப்புரம் தந்தை பெரியார் நகரில் உள்ள சமுதாய கூடம் பயன்பாடு இன்றி, பாழடைந்து வீணாகி வருகிறது.

அதில் அரசு போக்குவரத்து ஊழியர்களின் குடும்ப நிகழ்ச்சிகளும், குறைந்த வாடகைக்கு பொதுமக்களுக்கும் சமுதாய கூடம் வழங்கினர். சில ஆண்டுகள் மட்டுமே பயன்பாட்டில் இருந்த இந்த சமுதாய கூடம் திடீரென மூடப்பட்டது. இதனால் கடந்த 15 ஆண்டிற்கு மேலாக சமுதாய கூடம் பயன்பாடு இன்றி மூடியே கிடக்கிறது.

அந்த கட்டடங்களும் பராமரிப்பு இன்றி சேதமடைந்து, சுவர்கள் மீது மரம், செடி கொடிகள். வளர்ந்தது. சமுதாய கூடத்தை சுற்றிலும், காடு போல உள்ளது. அங்கு பாம்பு உள்ளிட்ட விஷ உயிரிகள் திடீர் திடீரென வெளியேறி அருகே உள்ள குடியிருப்பு வாசிகளை மிரட்டி வருகிறது. மேலும் சமூதாய நலக் கூடம் நீண்டகாலமாக பூட்டி கிடப்பதால், அங்கு சமூக விரோத செயல்கள் அரங்கேறுகிறது. மூடி கிடக்கும் கட்டடத்தை இடித்து அகற்றிவிட்டு, புதிய சமுதாய கூடம் கட்டவேண்டும் அல்லது பொது மக்கள் பயன்பாட்டிற்கான வேறு கட்டடம் அமைத்து தர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி பொது மக்கள் மத்தியில் கோரிக்கை வலுத்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.



# தமிழக மீனவர்கள் மீது தாக்குதல்: ஜி.கே.வாசன் கண்டனம்

சென்னை, ஜூன் 27

தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

தமிழ்நாட்டின்ராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் கச்சத்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கை கடற்படையினர் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியது மிகவும் கண்டிக்கத்தக்கது.இலங்கை கடற்படையினரின் தாக்குதலால் மீனவர்களின் உடல்நலம் பாதிக்கப்பட்டதோடு, பல லட்சம் ரூபாய் அளவிற்கு நஷ்டம் அடைந்திருப்பதாக தெரிவித்துள்ளனர்.



எனவே இலங்கை கடற்படையினரின் தொடர் தாக்குதலில் இருந்து மீனவர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு மத்திய மாநில அரசுகளுக்கு உண்டு. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# போராடும் மாணவிகளை அலைக்கழிப்பது ஏன்? அண்ணாமலை கேள்வி

சென்னை, ஜூன் 27

பாஜக முன்னாள் தலைவர்அண்ணாமலைதனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருப்பதாவது;

சென்னை பெருங்குடியில் அமைந்துள்ள, டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரி மாணவியர் விடுதியில், அடிப்படை வசதிகள் கோரி பல காலமாக மாணவியர் கோரிக்கை வைத்து வந்துள்ளனர். 152 அறைகள் இருக்கும் இந்த விடுதியில், 40 கழிப்பறைகளே உள்ளன. அறைக்கு மூன்று பேர்என, சுமார்450க்கும் அதிகமான மாணவியர் இங்கு தங்கிப் பயின்று வருகின்றனர்.

இந்த நிலையில், எந்த வித முன்னறிவிப்பும் இல்லாமல், சேப்பாக்க வளாக மாணவியர் 115 பேரையும், பெருங்குடி வளாகத்திற்கு மாற்றியுள்ளனர். ஏற்கனவே அடிப்படை வசதிகள் முறையாக இல்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருந்த மாணவியர், மேலும் அதிகமாகப் பாதிக்கப்பட்டு, வேறு வழியின்றி, நேற்று உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாநிலத்தின் தலைமைச் சட்டக் கல்லூரி விடுதியில், அடிப்படை வசதிகளைக் கூட செய்து தராமல், மேலும் மேலும் அவர்களை அலைக்கழிப்பது ஏன்? நல்ல குடிநீர், தரமான உணவு என எதுவும் வழங்கப்படுவதில்லை. சட்டம் பயிலும் மாணவியர் நிலையே இப்படி என்றால், இதர மாணவ, மாணவியர் விடுதிகளின் நிலை எத்தனை மோசமாக இருக்கும்?



அம்பேத்கர் சட்டக் கல்லூரி மாணவியருடன் பேச்சுவார்த்தை நடத்தி, அவர்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்று திமுக அரசு சார்பில் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது. திமுக அரசு, வழக்கம்போல இந்தப் பிரச்சினையை மடைமாற்றிவிடலாம் என்று எண்ணினால், அது நடக்காது.

அம்பேத்கர் சட்டக் கல்லூரி விடுதி மட்டுமல்ல, தமிழகத்தில் உள்ள அனைத்து மாணவ, மாணவியர் விடுதிகளிலும், முறையான அடிப்படை வசதிகள் உள்ளனவா என்பதை ஆய்வு செய்ய வேண்டும். தரமான உணவு, நல்ல குடிநீர், சுகாதாரமான சுற்றுச்சூழல் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

இதற்கு முதல் படியாக, சென்னை அம்பேத்கர் சட்டக் கல்லூரி மாணவியர் போராட்டம் அமைந்திருக்கிறது. தங்கள் நியாயமான கோரிக்கைகளுக்காகப் போராடிய அனைத்து சட்டக் கல்லூரி மாணவியருக்கும் எனது வாழ்த்துக்கள்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# ஆனி அமாவாசை: ராமேஸ்வரம் அக்னி தீர்த்த கடலில் புனித நீராட குவிந்த பக்தர்கள்

ராமநாதபுரம், ஜூன் 27

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரத்தில் உள்ள ராமநாத சுவாமி கோவில் பிரசித்தி பெற்ற சிவாலயங்களில் ஒன்றாக திகழ்கிறது. இங்குள்ள அக்னி தீர்த்த கடலில் புனித நீராடி தர்ப்பணம் கொடுத்தால் முன்னோர்களின் ஆசி கிடைக்கும் என்பது நம்பிக்கை. இதற்காக நாடு முழுவதும் இருந்து நாள்தோறும் ஆயிரக்கணக்கானபக்தர்கள்ராமேசுவரம் வருகை தருகிறார்கள். அமாவாசை நாட்களில் தர்ப்பணம் செய்வது சிறப்பாக கருதப்படுவதால்,அன்றைய தினம் பக்தர்களின் வருகை அதிகமாக இருக்கும்.



அவ்வகையில், ஆனி மாத சர்வ அமாவாசையை முன்னிட்டு ராமேசுவரம் அக்னி தீர்த்த கடலில் புனித நீராடுவதற்கு இன்று ஏராளமான பக்தர்கள் குவிந்தனர். அக்னி தீர்த்த கடலில் புனித நீராடிய பக்தர்கள், தங்கள் முன்னோர்களின் ஆத்மா சாந்தி அடைய வேண்டி திதி, தர்ப்பண சங்கல்ப பூஜை செய்தனர். தொடர்ந்து கோவிலில் உள்ள 22 தீர்த்த கிணறுகளில் புனித நீராடி, அதன்பின்னர் நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர். 100, 200 கட்டண தரிசன பாதை மற்றும் இலவச தரிசன பாதை என அனைத்து இடங்களிலும் பக்தர்களின் கூட்டம் அதிகமாக இருந்தது.

இதேபோல் திருப்புல்லாணி அருகே உள்ள சேதுக்கரை கடலிலும், தேவிபட்டினம் நவபாஷாண நவக்கிரக கடலிலும் புனித நீராடுவதற்கு ஏராளமான பக்தர்கள் குவிந்திருந்தனர்.

# அதிமுக முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகத்தை கொலை செய்ய முயற்சித்த வழக்கு 15 பேர் விடுதலை



விழுப்புரம், ஜூன் 27

அதிமுகவை சேர்ந்த முன்னாள் அமைச்சர் சி.வி. சண்முகம் கடந்த 2006 ல் திண்டிவனத்தில் உள்ள தனது வீட்டில் அமர்ந்துகட்சியினருடன் பேசிக்கொண்டிருந்தார். அப்போது அங்கு ஆயுதங்களுடன் வந்த கும்பல் அவரை தாக்கிக் கொல்ல முயற்சி செய்தது.

சி.வி. சண்முகம் உடனடியாக காருக்கு அடியில் புகுந்து அவர் உயிர் தப்பினார். ஆனால், அவரது உறவினரும், அதிமுக தொண்டருமான முருகானந்தம் கொல்லப்பட்டார். இக்கொலை மற்றும் கொலை முயற்சி வழக்கு தொடர்பாக பாமகவைச் சேர்ந்த சீனுவாசன், கருணாநிதி, குமரவேல் பிரதீபன், ரகு, குமரன், சிவா உள்ளிட்ட 20 பேர் மீது ரோஷணை காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இந்த நிலையில் வழக்கில் கைதான பாமகவினர் 15 பேரை விடுதலை செய்து மாவட்ட கூடுதல் அமர்வுநீதிமன்றம்தீர்ப்பு வழங்கி உள்ளது. 2011ம் ஆண்டு சிபிஐ விசாரணைக்கு மாற்றப்பட்ட இவ்வழக்கில், ராமதாஸ் சகோதரர் சீனுவாசன் உள்பட 20 பேர் குற்றம் சாட்டப்பட்டனர். சீனுவாசன் உள்பட 5 பேர் விசாரணையின் போதே மரணமடைந்தனர். மீதமுள்ள 15 பேரையும் நீதிமன்றம் இன்று விடுதலை செய்துள்ளது.

# 30ம் தேதி சென்னை மாநகராட்சி மாமன்றக் கூட்டம்

சென்னை, ஜூன் 27

சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

மேயர் ஆர். பிரியா தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சியின் மாமன்றக் கூட்டம் 30.06.2025 அன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

வருகின்ற 27.06.2025 அன்று நடைபெறுவதாக இருந்த பெருநகர சென்னை மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் தவிர்க்க முடியாத நிர்வாக காரணங்களால், 30.06.2025 அன்று திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு,மேயர் பிரியா தலைமையில் மாநகராட்சி மன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. என தெரிவிக்கப்பட்டுள்ளது .



# கல்லூரிக்கு போகச் சொன்னதால் விபரீதம்.. தந்தை தலையில் கல்லைப் போட்டுகொன்ற மகன்

திருநெல்வேலி ஜூன் 27

நெல்லை அருகே கல்லூரிக்கு செல்லாமல் வீட்டிலேயே இருந்ததை தட்டிக்கேட்டதால் தந்தையின் தலையில் கல்லை போட்டு அவரது மகன் கொலை செய்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

படித்தால்தான் முன்னேற முடியும் என தந்தை மாரியப்பன் அறிவுரை கூறியதால் ஆத்திரம் அடைந்த தங்கப்பாண்டி (19) இந்த வெறிச்செயலில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது.





தந்தை மாரியப்பனின் உடலை கைப்பற்றிய போலீசார், தங்கப்பாண்டியை கைது செய்து, அவரிடம் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# விடுதியில் தங்கி 3 நாள் உல்லாசம்; காதலனிடமிருந்து தப்பி கழிவறையில் பதுங்கிய இளம்பெண்..அடுத்து நடந்த சம்பவம்

சென்னை, ஜூன் 27

சென்னை திருவான்மியூர் தனியார் விடுதியில் காதலியுடன் தங்கி 3 நாட்களாக அடிக்கடி உல்லாசமாக இருந்த காதலன், அரைகுறை ஆடையுடன் இருந்ததை நண்பர்களுக்கு விருந்தாக்கும் வகையில் காண்பிக்கமுயற்சிசெய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இதனையடுத்து காதலனிடமிருந்து தப்பி கழிவறையில் பதுங்கிய இளம்பெண் போலீசார் உதவியுடன் பத்திரமாக மீட்கப்பட்டிருப்பது கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இந்த சம்பவம் பற்றிய விவரம் வருமாறு:


நெல்லை மாவட்டத்தை சேர்ந்த இளம்பெண் ஒருவர் கடந்த ஓராண்டாக ஸ்ரீபெரும்புதூரில் உள்ள கார் தயாரிப்பு நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார். கிண்டி ஓட்டலில் உள்ள பப்புக்கு சென்றபோது கன்னியாகுமரியை சேர்ந்த சகீன் என்ற வாலிபரோடு இளம்பெண்ணுக்கு பழக்கம் ஏற்பட்டது. இருவரும் நட்பாக பழகி வந்துள்ளனர். அப்போது சகீன் நான் ஏற்கனவே ஒரு பெண்ணை உயிருக்கு உயிராக காதலித்தேன் அவர் தன்னை விட்டு விட்டு வேறு ஒருவருடன் சென்று விட்டதாக கூறியுள்ளார்.

இதைத்தொடர்ந்து சகீனுக்கு ஆறுதல் கூறிய இளம்பெண் பின்னர் காதலில் விழுந்து உள்ளார். இதைத்தொடர்ந்து இருவரும் வெளியில் சென்று தங்குவதை வழக்கமாக வைத்திருந்தனர். 3 மாதங்களுக்கு ஒருமுறை வார இறுதி நாட்களில் சந்தித்து சொகுசு ஓட்டலில் அறை எடுத்து தங்கி உல்லாசமாக இருப்பதை வாடிக்கையாக வைத்திருந்தனர்.

இதன்படி, கடந்த வெள்ளிக்கிழமை சாகீன் தனது நண்பர் மற்றும் பெண் தோழியோடு சென்னைக்கு காதலியை பார்க்க வந்துள்ளார். சென்னைதிருவான்மியூர் கிழக்கு கடற்கரை சாலையில் தனியார் தங்கும் விடுதியில் அறை எடுத்து இருவரும் தங்கினார்கள்.

அப்போது இருவரும் உயர்ரக மதுபானங்களை வாங்கி வந்து அறையில் வைத்தே நன்றாக குடித்து உள்ளனர். சாகீன் மற்றும் இளம்பெண் ஒரு அறையிலும், அவரது நண்பர் பெஜின் மற்றும் அவரது தோழி வேறு ஒரு அறையிலும் தங்கி உள்ளனர். இந்தநிலையில் நேற்று முன் தினம் நள்ளிரவில் சாகீன் இளம்பெண்ணுடன் உல்லாசமாக இருந்துள்ளார். அப்போது திடீரென அவரது நண்பர்களுக்கு கால் செய்துள்ளார். அப்போது காதலியுடன் அரைகுறை ஆடையில் இருந்ததை அவர் செல்போன் மூலமாக காட்டியதாக கூறப்படுகிறது.

இதனால் அதிர்ச்சி அடைந்த இளம்பெண் தங்கி இருந்த கழிவறைக்கு செல்போனுடன் ஓடிச்சென்று உள்பக்கமாக கதவை பூட்டிக்கொண்டு உதவிக் கேட்டு கதறி உள்ளார்.



முதலில் அவருடன் வேலை செய்யும் தோழிக்கு தான் கடத்தப்பட்டுள்ளதாகவும் தன்னை காப்பாற்றுமாறும் கூறி விடுதியின் லொக்கேஷனை ஷேர் செய்து அதனை வாட்ஸ் அப் ஸ்டேட்டஸ் வைத்துள்ளார். அதனைபார்த்த பெண்ணின் உறவினர்கள், நண்பர்கள் என பலர் போலீஸ் கட்டுப்பாட்டு அறைக்குதகவல்கொடுத்துள்ளனர்.

இந்த தகவல் திருவான்மியூர் போலீசாருக்கும் பறந்தது. அவர்கள் ரோந்து வாகனம் மூலமாக விரைந்து சென்று இளம்பெண்ணை மீட்பதற்காக நடவடிக்கையில் இறங்கினார்கள். இளம்பெண் அனுப்பிய லொகேஷனை வைத்து சம்பந்தப்பட்ட தனியார் விடுதியை சென்றடைந்த போலீசார் அதிரடி விசாரணையில் இறங்கினார்கள்

பின்னர் இளம்பெண் காதலனோடு தங்கியிருந்த அறையை கண்டுபிடித்து அதிரடியாக உள்ளே புகுந்து அவரை பத்திரமாக மீட்டு வெளியில் கொண்டு வந்தனர். இது பற்றி பின்னர் பாதிக்கப்பட்ட பெண் புகார் அளித்தார்.

அதன்பேரில் போலீசார் காதலன் சகின் மற்றும் அவரது நண்பர் பெஜின் ஆகியோர் மீது வழக்குப்பதிவு செய்தனர். பின்னர் இருவரையும் கைது செய்த போலீசார்அவர்களைசிறையில் அடைத்தனர்.

போலீசார் விசாரிக்கும்போது காதலன் சகின் தனது நண்பரிடம் திருவனந்தபுரம் செல்வது பற்றி பேசுவதற்காகவே வீடியோகால் செய்ததாகவும் அதனை தன்னுடன்இருந்தகாதலி தவறாக புரிந்து கொண்டு விட்டார் எனவும் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் போலீசார் சகின் மீதும் அவரது நண்பர் மீதும் நடவடிக்கை எடுத்துள்ளனர். இளம்பெண் அளித்த புகார் அடிப்படையில் இருவர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டதாக போலீசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. காதலனுடன் வெளியில் தங்கி உல்லாசமாக இருந்த இளம்பெண், போலீசாரின் உதவியுடன் மீட்கப்பட்ட சம்பவம் பெண்ணின் உறவினர்கள்மற்றும்தோழிகள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.


# அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணியில் எந்த பிரச்சினையும் இல்லை: வானதி சீனிவாசன்

கோவை, ஜூன் 27

கோவையில் பா.ஜ.க. எம்.எல்.ஏ.வானதி சீனிவாசன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது,

இன்று இந்திய நாட்டின் வரலாற்றில் முக்கியமான நாள். 1974ம் வருடம் ஜூன் 25ந்தேதி முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி மூலம் செயல்படுத்தப்பட்ட எமர்ஜென்சி இன்றுடன் 50 ஆண்டுகள் நிறைவடைகிறது. இன்று தி.மு.க., காங்கிரஸ்கட்சியுடன்கூட்டணி வைத்துள்ளது. ஆனால் நெருக்கடி நிலை காலகட்டத்தில் தான் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தி.மு.க.வினர் கொடுமைகளை அனுபவித்தார்கள். அரசியல் கட்சியினர் சிறைகளில் மிக மோசமாக நடத்தப்பட்டார்கள். எதற்காக நாங்கள் இதைச் சொல்கிறோம். கடந்த கால வரலாற்றை மறக்கக்கூடாது. இதற்காக காங்கிரஸ் கட்சி இதுவரை மன்னிப்பு கேட்கவில்லை.

இன்று திருப்பூரில் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கேட்டை நோக்கி சென்று கொண்டு இருக்கிறது. தமிழகத்தில் நெருக்கடி நிலை உள்ளதோ என்று எண்ணத் தோன்றுகிறது.



முருக பக்தர்கள் மாநாட்டால் அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணியில் எந்த பிரச்சனையும் இல்லை. எங்கள் கூட்டணி நன்றாக உள்ளது. கூட்டணி ஆட்சி குறித்து அமித்ஷா தெளிவாக பேசி விட்டார். தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு அ.தி.மு.க. தான் தலைமை தாங்குகிறது. தி.மு.க. ஆட்சி அகற்றப்படுவது உறுதி. இவ்வாறு அவர் கூறினார்.

# மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு ரூ.2,629 கோடி மானியத்தை விடுவிக்க கோரினோம்: அமைச்சர் சக்கரபாணி பேட்டி

சென்னை, ஜூன் 27

புதுடெல்லியில் நுகர்வோர்பாதுகாப்பு,உணவு மற்றும் பொது விநியோகத் துறை மந்திரி பிரகலாத் ஜோஷி அவர்களை தமிழக உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி நேரில் சந்தித்து, மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய ரூபாய் 2670.64 கோடி நிலுவை நிதியை உடனடியாக வழங்கவும், நியாய விலைக் கடைகளில் எடைபோடும் இயந்திரத்தை கைவிரல் ரேகை பதிவு செய்யும் கருவியுடன் இணைத்து பொருட்கள் வழங்குவதால் குடும்ப அட்டைதாரர்களுக்கு ஏற்படும் காலதாமதத்தை தவிற்கும் வகையில் நடவடிக்கை எடுத்திடவும்,இணைப்பு முறையை அமல்படுத்திட 31.03.2026 வரை கால நீட்டிப்பு வழங்கவும், தமிழ்நாட்டிற்கு இந்திய உணவுக் கழகம் வழங்கும் அரிசியினை முழுவதுமாக புழுங்கல் அரிசியாக ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநிலத் தொகுப்பில் இருந்து வழங்கவும், தமிழ்நாட்டில் இருந்து 202425 காரிப் பருவக் கொள்முதல் அளவை 16 இலட்சம் டன்னிலிருந்து 19.24 லட்சம் டன்னாக உயர்த்திடவும், ஆகிய கோரிக்கைகள் அடங்கிய மனுவை வழங்கினார்.



இந்நிகழ்வின்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, திருச்சி சிவா, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் மோகன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் முருகேஷ்ஆகியோர் உடனிருந்தனர்.

டெல்லியில் மத்திய உணவுத்துறை மந்திரி பிரகலாத் ஜோஷியை சந்தித்த பின் அமைச்சர் சக்கரபாணி செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

தமிழ்நாட்டுக்கு ரூ.2,629 கோடி மானியத்தை விடுவிக்க மத்திய உணவுத்துறை மந்திரியிடம் கோரினோம். 12 சதவீத ஜிஎஸ்டி வரியால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அதை 5 சதவீதமாக குறைக்க கோரியுள்ளோம்.

மாநில அரசு ரூ,31, மத்திய அரசு ரூ.31 கோடி ஊக்கத்தொகையை தரும்படி கேட்டிருக்கிறோம். மாநில அரசு, மத்திய அரசு பாதி என விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை தர அமைச்சரிடம் கோரினோம். தமிழகத்தில் 3.74 லட்சம் மெட்ரிக் டன் அரிசி தேவைப்படுகிறது. 1 லட்சம் மெட்ரிக் டன் பற்றாக்குறை உள்ளது. பற்றாக்குறை அரிசியை ஆந்திரா, தெலுங்கானாவில் இருந்து கொள்முதல் செய்கிறோம். தமிழக மக்கள் விரும்பி சாப்பிடும் சன்ன ரக அரிசியை வழங்க வேண்டுமென மத்திய மந்திரியிடம் கோரினோம்.

மாங்கூழ் கொள்முதல் குறைந்திருப்பதை சுட்டிக்காட்டிஅதை உயர்த்தக்கோரியுள்ளோம். ஏற்கனவே ஆந்திராவில் அறிமுகப்படுத்திய நடைமுறையை தமிழகத்தில் அமல்படுத்த கோரியுள்ளோம். கிருஷ்ணகிரி, சேலம், தருமபுரி, வேலூர், திண்டுக்கல் மா உற்பத்தியாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிலோ ரூ.20க்கு விற்ற மாம்பழம் இந்தாண்டு ரூ.5க்கு விற்பனையாகி விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். நமது கோரிக்கையை பரிசீலிப்பதாக மத்திய மந்திரி சிவராஜ் சிங் சவுகார் உறுதி அளித்துள்ளார்.

இவ்வாறு அவர் கூறினார்.

# கைத்தட்டல்களுக்காக எதையாவது உளறுவது ஆபத்தானது ஆ.ராசாவுக்கு நயினார் நாகேந்திரன் கண்டனம்

சென்னை ஜூன் 27

தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

கண்களுக்குத் தெரியாத காற்றில் கூட ஊழல் செய்து, அம்பலப்பட்டு, சிறை சென்றுவந்த தி.மு.க. எம்.பி. ஆ. ராசா, நாட்டிற்காக நேர்மையாக உழைத்துக் கொண்டிருக்கும் நமது மத்திய உள்துறை மந்திரி அமித்ஷாவை தரக்குறைவாக விமர்சித்துள்ளது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. மக்களின் பிரதிநிதியாக பாராளுமன்றத்தில் பதவி வகிப்போருக்கு நாவடக்கம் தேவை, ஆ. ராசா அவர்களே! உங்கள் கட்சியின் ஆபாசப் பேச்சாளர்கள் போல கைத்தட்டல்களுக்காக எதையாவது உளறுவது ஆபத்தானது.



கடந்த சில தினங்களாக பயங்கரவாதிகளின் புகலிடமாகத் தமிழகம் மாறியதற்கு முழு முதற்காரணம் உங்கள் திராவிட மாடல் அரசு, சர்வதேச போதைப் பொருள் கடத்தல் மன்னனைக் கட்சிப் பொறுப்பில் வைத்துத் தாலாட்டிக் கொண்டிருந்த அரசு உங்கள் அரசு, தமிழகத்தில் ஆயுதக் கலாசாரம் வேரூன்றி வளர்வதை வேடிக்கை பார்க்கும் அரசு உங்கள் விளம்பர மாடல் அரசு, கர்ப்பிணிப் பெண்ணைக் காவல் நிலையத்திலேயே வைத்துக் கொடூரத் தாக்குதல் நடத்திய அரசு உங்கள் கொடுங்கோல் அரசு. இப்படி பொதுமக்களின் பாதுகாப்பை முழுவதுமாக அடகு வைத்த நீங்கள், இந்தியா என்ற மாபெரும் ஜனநாயக நாட்டின் பாதுகாப்பை மொத்தமாகக் கட்டிக் காக்கும் நமது மத்திய உள்துறை மந்திரியைப் பற்றி பேச என்ன தகுதி இருக்கிறது?

அதுசரி, தி.மு.க. ஆட்சியில் தமிழகத்தின் அவல நிலை குறித்து எதுவும் தெரியாமல், "நாம் தான் நம்பர் 1 முதல்வர்" என்ற மாய உலகில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் ஒருவரை தலைவராகக் கொண்ட மூடர் கூட்டத்திற்கு அனைவரும் முட்டாளாகத்தான் தெரிவார்கள், மஞ்சள் காமாலைக்காரர் கண்களுக்கு அத்தனையும் மஞ்சளாகத் தெரிவது போல. உங்கள் கீழ்த்தரமான ஆணவமிக்க அரசியல் நாகரிகமற்ற பேச்சுக்களுக்கு, தமிழக மக்கள் உங்களை 2026க்குப் பிறகு அரசியலை விட்டே துரத்திவிடுவது உறுதி.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# நெல்லையப்பர் கோவில் ஆனித்திருவிழா: சுவாமி தேருக்கு புதிய வடம் பொருத்தும் பணி

திருநெல்வேலி ஜூன் 27

நெல்லை டவுன் நெல்லையப்பர் கோவிலில் ஆனிப்பெருந்திருவிழா ஆண்டுதோறும் சிறப்பாக நடக்கும். திருவிழாவின் 9வது நாளில் சுவாமி, அம்பாள், விநாயகர், சண்முகர், சண்டிகேஸ்வரர் உள்ளிட்ட தேர்கள் பக்தர்களால் வடம் பிடித்து இழுக்கப்பட்டு 4 ரத வீதிகளிலும் வலம் வரும்.



இந்த ஆண்டு ஆனிப் பெருந்திருவிழா கொடியேற்றம் வருகிற 30ந் தேதி நடக்கிறது. வருகிற 8ந் தேதி வெகு விமரிசையாக தேரோட்டம் நடைபெற உள்ளது.

இந்த தேரோட்ட நிகழ்வில், பெரிய தேரான சுவாமி தேரை ஏராளமான பக்தர்கள் வடம் பிடித்து இழுப்பார்கள். இந்த தேர் 450 டன் எடையும், 82 அடி உயரமும், 28 அடி அகலமும் கொண்டதாகும்.

தற்போது தேரை தயார்படுத்தும் பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. இதற்காக கண்ணாடி இழை கூண்டு அகற்றப்பட்டு சுவாமி தேர் உள்ளிட்ட 5 தேர்களும் தீயணைப்பு வீரர்களால் தண்ணீரை பீச்சி அடித்து சுத்தப்படுத்தப்பட்டது. தொடர்ந்து சாரம் கட்டும் பணி, அலங்கார துணிகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

அதன் தொடர்ச்சியாக நேற்று சுவாமி தேருக்கு புதிய வடம் பொருத்தும் பணி நடைபெற்றது. கடந்த ஆண்டு தேரோட்டத்தின் போது 4 முறை சுவாமி தேருக்கான வடம் கயிறு அறுந்தது. அதற்கு பல்வேறு தரப்பினரும் கடும் அதிருப்தி தெரிவித்தனர். இதன் காரணமாக தற்போது புதிய வடகயிறு வாங்கப்பட்டுள்ளது. ரூ.6.5 லட்சம் மதிப்பீட்டில் சுமார் 1300 அடி நீளத்தில் புதிய வடம் கயிறு வாங்கப்பட்டுள்ளது.

அதே நேரம் திருவிழாவுக்கு நாள் நெருங்குவதால் கோவில் முன்பு பந்தல் அமைக்கும் பணியிலும் ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இதன் காரணமாக மாற்று வழியில் மோட்டார் சைக்கிள்கள் உள்ளிட்ட வாகனங்களும் இயக்கப்படுகின்றன. இதேபோல் ரதவீதிகளில் செல்லும் பஸ்களும் பாரதியார் தெரு வழியாக இயக்கப்படுகின்றன.

# ஒருதலை காதலால் விபரீதம்.. காதலனை பழிவாங்க நாடு முழுவதும் வெடிகுண்டு மிரட்டல் விடுத்த ஐ.டி. பெண் ஊழியர்

ஆமதாபாத், ஜூன் 27

நாடு முழுவதும் வெடிகுண்டு மிரட்டல்கள் விடுத்த வழக்கில் சென்னையைச் சேர்ந்த பெண் ஐ.டி. ஊழியர் சிக்கினார். தனது காதலை ஏற்காத சக ஊழியரை பழி வாங்குவதற்கு இதனைச் செய்ததாக வாக்குமூலம் அளித்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.



முன்னதாக குஜராத் மாநிலத்திற்கு கடந்த மாதத்தில், தொடர்ச்சியாக வெடிகுண்டு மிரட்டல் வந்து கொண்டே இருந்தது. அதுவும் குறிப்பாக ஆமதாபாத்தில் இருக்கும் நரேந்திர மோடி கிரிக்கெட் மைதானத்திற்கு அடிக்கடி வெடிகுண்டு மிரட்டல் வந்து கொண்டிருந்தது. நரேந்திர மோடி ஸ்டேடியத்திற்கு மட்டும் 13 முறை இந்த வெடிகுண்டு மிரட்டல் வந்திருந்தது. அதோடு ஆமதாபாத்தில் உள்ள ஜெனீவா லிபரல் பள்ளிக்கு நான்கு முறையும், திவ்ய ஜோதி பள்ளிக்கு மூன்று முறையும், பி.ஜெ.மருத்துவ கல்லூரிக்கு ஒரு முறையும் வெடிகுண்டு மிரட்டல் வந்திருந்தது.

இதனால் அனைத்து போலீஸாரும் ஒருங்கிணைந்து இந்த வெடிகுண்டு மிரட்டல் குறித்து தீவிரமாக விசாரித்து வந்தனர். பெரும்பாலான கொலை மிரட்டல்கள் போலி இமெயில் ஐ.டியில் இருந்து வந்திருந்தது. அதோடு தனது அடையாளத்தை மறைக்க டார்க் வெப் பயன்படுத்தப்பட்டு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டு இருந்தது.

ஆமதாபாத்தில் பி.ஜெ. மருத்துவமனை மருத்துவ கல்லூரியில் ஏர் இந்தியா விமானம் மோதி விபத்துக்குள்ளான பிறகும் ஒரு வெடிகுண்டு மிரட்டல் வந்திருந்தது. அதில், இப்போது எங்களது திறமையை உணர்ந்திருப்பீர்கள். உங்களுக்கு நேற்று அனுப்பிய இமெயிலை தொடர்ந்து குஜராத் முன்னாள் முதல்மந்திரியுடன் விமானம் விபத்துக்குள்ளானது. "இப்போது தெரிந்திருக்கும் நாங்கள் விளையாடவில்லை" என்று அதில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

இந்த மெயில் மிரட்டலை தொடர்ந்து குஜராத் சைபர் பிரிவு போலீசார் நடத்திய தீவிர விசாரணையில் வெடிகுண்டு மிரட்டல் விடுத்த பெண் சென்னையை சேர்ந்தஐ.டி.பெண் ஊழியர் என்பது தெரிய வந்தது.

இதுதொடர்பாக ஆமதாபாத் குற்றப்பிரிவு இணை கமிஷனர் சரத் சிங்கால் கூறுகையில், "தொடர்ச்சியாக வெடிகுண்டு மிரட்டல் விடுத்தது தொடர்பாக சென்னையை சேர்ந்த ரெனே ஜோஷில்டா என்ற பெண் இன்ஜினீயர் கைது செய்யப்பட்டார். அவர் போலி இமெயில் முகவரிகளை பயன்படுத்தி தொடர்ச்சியாக வெடிகுண்டு மிரட்டல் விடுத்து வந்தார். அவர் திவிஜ் பிரபாகர் என்பவரை ஒருதலைபட்சமாக காதலித்து வந்துள்ளார். ஆனால் பிரபாகர் கடந்த பிப்ரவரி மாதம் வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டுள்ளார். இதனால் அவரைப் பழி வாங்க அவரது பெயரை பயன்படுத்தி அவரை இதில் சிக்க வைக்க வேண்டும் என்பதற்காக போலி இமெயில் ஐ.டி, டார்க் வெப் போன்றவற்றை பயன்படுத்தி தனது அடையாளத்தை மறைத்து ஜோஷில்டா வெடிகுண்டு மிரட்டல் விடுத்து வந்தார்.

அவர் ரோபோ செய்வதில் இன்ஜினீயரிங் முடித்துவிட்டு தனியார் நிறுவனம் ஒன்றில் கன்சல்டண்டாக இருக்கிறார். பிரபாகர் மீதான கண்மூடித்தனமாக காதல் காரணமாக தனது தொழில் நுட்ப அறிவைப் பயன்படுத்தி நரேந்திர மோடி ஸ்டேடியம், இரண்டு பள்ளி, மருத்துவ கல்லூரிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்திருந்தார்.

குஜராத் மட்டுமல்லாது மராட்டிய மாநிலம் உள்பட 11 மாநிலங்களுக்கும் அவர் 21 முறை வெடிகுண்டு மிரட்டல் விடுத்திருந்தார். அவர் எவ்வளவுதான் தனது அடையாளத்தை மறைக்க முன்னெச்சரிக்கையுடன் வேலை செய்தாலும், அவர் செய்த ஒரு சிறிய தவறு மூலம் அவரது அடையாளத்தை கண்டு பிடித்து அவரை கண்காணித்து கைது செய்தோம். அவரிடமிருந்து டிஜிட்டல் மற்றும் பேப்பர் ஆதாரங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது" என்று அவர் தெரிவித்தார். காதலனைப் பழி வாங்க நினைத்த சென்னையை சேர்ந்த ஐ.டி. பெண் ஊழியர் தற்போது குஜராத் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

# திருப்பூரில் பெரும் பரபரப்பு.. இந்து முன்னணி நிர்வாகி நடுரோட்டில் வெட்டிக்கொலை

திருப்பூர் ஜூன் 27

திருப்பூர் குமாரானந்தபுரத்தை சேர்ந்த பாலமுருகன் என்பவர் நடுரோட்டில் ஓட ஓட வெட்டிக்கொலை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.



கொலை செய்யப்பட்ட பாலமுருகன் இந்து முன்னணி அமைப்பின் திருப்பூர் வடக்கு ஒன்றிய தலைவராக இருந்து வந்தார். நள்ளிரவில் மூன்று பேர்கொண்டகும்பலால் பாலமுருகன் கொலை செய்யப்பட்டதாகபோலீசார் தகவல் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக மூன்று தனிப்படைகள் அமைத்து குற்றவாளிகளை போலீசார் தேடி வருகின்றனர். மேலும் கொலைக்கான காரணம் குறித்தும் போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# பொதுமாறுதல் கலந்தாய்வுக்கு முன்பே நிர்வாகக் காரணம் கூறி முறைகேடாக மாறுதல் தருவதா? அன்புமணி கண்டனம்

சென்னை ஜூன் 27


பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழக பள்ளிக் கல்வித்துறையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கான பொது இட மாறுதல் கலந்தாய்வுக்கான தேதி கூட இன்னும் அறிவிக்கப்படாத நிலையில், தென் மாவட்டங்களில் காலியாக இருக்கும் ஆசிரியர் பணியிடங்களில் விதிகளை மீறி ஆசிரியர்களுக்கு நிர்வாக மாறுதல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. முறைகேடாக மேற்கொள்ளப்படும் இந்த இடமாறுதல்கள் சட்டவிரோதமானவை; கண்டிக்கத்தக்கவை ஆகும்.

பொதுமாறுதல் கோரும் ஆசிரியர்கள் அதற்காக கடந்த 19ம் தேதி முதல் இன்று 25ம் தேதி வரை இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கான காலக்கெடுவே இன்னும் முடிவடையவில்லை. காலக்கெடு முடிவடைந்த பிறகுதான் காலியாக உள்ள இடங்கள் பட்டியலிடப்பட்டு, இட மாறுதல் கோரி விண்ணப்பித்தவர்களின் முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு, அவற்றின் அடிப்படையில் கலந்தாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். இதுதான் வழக்கமாக பின்பற்றப்படும் நடைமுறை.

ஆனால், அதற்கு முன்பாகவே தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, மதுரை, திண்டுக்கல், தேனி, விருதுநகர், திருச்சி ஆகிய மாவட்டங்களில்தான் நிர்வாக மாறுதல் அடிப்படையில் கொல்லைப்புறமாக காலியிடங்கள் வேகமாக நிரப்பப்பட்டு வருகின்றன. இதேநிலை நீடித்தால் பொதுமாறுதல் கலந்தாய்வின்போது இந்த மாவட்டங்களில் நிரப்புவதற்கு காலியிடங்களே இருக்காது. இது இட மாறுதலுக்கான தகுதியும், தேவையும் கொண்டவர்களுக்கு இழைக்கப்படும் துரோகம் ஆகும். இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

கோடை விடுமுறை முடிவதற்கு முன்பாகவே பொதுமாறுதல் கலந்தாய்வு நடத்தப்பட வேண்டும்; குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு முன்பே ஒவ்வொரு மாவட்டத்திலும் காலியாக உள்ள பணியிடங்களின் விவரம் சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் முதன்மைக் கல்வி அலுவலர்கள் அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்பட வேண்டும் என்று ஆசிரியர் சங்கங்கள் வலியுறுத்தி வருகின்றன.



ஆனால், தங்களுக்கு வேண்டியவர்களுக்கு சலுகை காட்டவும், பணம் ஈட்டவும் நிர்வாக மாறுதல் என்ற வாய்ப்பு ஒரு கருவியாக பயன்படுத்தப்படுகிறது.

நிர்வாக மாறுதல் என்ற பெயரில் நிகழ்த்தப்படும் அத்துமீறலால் சமூகநீதிக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. ஆசிரியர்களைப் பொறுத்தவரை தென் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள்தான் அதிகம். பொதுமாறுதல் கலந்தாய்வு தொடங்கப்படுவதற்கு முன்பே நிர்வாக மாறுதல் என்ற பெயரில் இப்போதுள்ள காலியிடங்கள் அனைத்தும் நிரப்பப்படுகின்றன. பொதுமாறுதல் கலந்தாய்வு மூலம் தென் மாவட்டங்களுக்கு இடமாறுதல் பெற முயன்று, காலியிடங்கள் இல்லாததால், அந்த வாய்ப்பைப் பெற முடியாதவர்கள் மாற்றுவழிகளில் முயல்வார்கள். அப்போது அவர்களுக்கு கூடுதல் பணியிடங்களை உருவாக்கி இடமாறுதல் வழங்கப்படும் அளவுக்கு தாராளம் காட்டப்படும்.

இப்படியாக மொத்த ஆசிரியர்களின் பெரும்பான்மையினர் தென் மாவட்டங்களுக்கு சென்று விடும் நிலையில் வட மாவட்டங்களில் உள்ள அரசு பள்ளிகளில் கற்பிப்பதற்கு போதிய ஆசிரியர்கள் இருக்க மாட்டார்கள். ஒவ்வொரு ஆண்டும் இது வாடிக்கையாக உள்ளது. பத்தாம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பொதுத் தேர்வுகளின் தேர்ச்சி விகிதங்களில் வட மாவட்டங்கள் மிகவும் பின் தங்கி இருப்பதற்கு இதுதான் காரணம் ஆகும்.

அரசுப் பள்ளிகளில் கல்வித்தரம் சீராக இருக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். அதற்கு அனைத்துப் பள்ளிகளிலும் போதிய எண்ணிக்கையில் ஆசிரியர்கள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். அதற்கு வசதியாக நிர்வாக மாறுதல் என்ற பெயரில் பணியிட மாறுதல் வழங்கும் மோசடி முறைக்கு முடிவு கட்டப்பட வேண்டும். பொதுமாறுதல் கலந்தாய்வை ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தில் வெளிப்படையான முறையில் நடத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# செல்போன் பார்ப்பதை கண்டித்ததால் மாணவி தற்கொலை: குற்ற உணர்வில் அத்தையும் உயிரை மாய்த்த கொடூரம்

விழுப்புரம் ஜூன் 27

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் அருகே பனிச்சமேடு மீனவர்கிராமத்தை சேர்ந்தவர் விஜய் (வயது 25). இவரது மனைவி ஸ்ரீமதி (23). இவர்களுக்கு திருமணமாகி 2 ஆண்டுகள் ஆகிறது. குழந்தை இல்லை. விஜய்யின் அக்கா அமலா, செங்கல்பட்டு மாவட்டம் பரமன்கேணி மீனவர் கிராமத்தை சேர்ந்த ஏழுமலைக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டார். அவர்களுக்கு கீர்த்திகா (15) என்ற மகள் இருந்தார்.



கடந்த சில ஆண்டுகளுக்கு முன் ஏழுமலை இறந்துவிட்டார். இதையடுத்து அமலா தனது மகளுடன் பனிச்சமேடு கிராமத்தில் தம்பி விஜய் வீட்டின் அருகில் குடியேறினார். அருகில் உள்ள தாய்மாமா விஜய் வீட்டில் வளர்ந்து வந்த கீர்த்திகா, அனுமந்தை அரசு மேல்நிலைப் பள்ளியில் 10ம் வகுப்பு படித்து வந்தார்.

நேற்று முன்தினம் இரவு விஜய், ஸ்ரீமதி, கீர்த்திகா ஆகியோர் வீட்டில் ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டனர். பின்னர் கீர்த்திகா வீட்டின் மாடிக்கு தூங்கச் சென்றார். விஜய், ஸ்ரீமதி ஆகியோர் கீழ்வீட்டில் தூங்கினர்.

நேற்று அதிகாலை மீன் பிடிப்பதற்காக விஜய் கடலுக்கு சென்றுவிட்டார். நீண்ட நேரமாகியும் வீட்டில் இருந்து கீர்த்திகா, ஸ்ரீமதி ஆகியோர் வெளியே வரவில்லை. இதனால் சந்தேகம் அடைந்த அமலா மற்றும் அக்கம்பக்கத்தினர், வீட்டின் உள்ளே சென்று பார்த்தனர்.

அப்போது வீட்டில் ஸ்ரீமதியும், மாடியில் கீர்த்திகாவும் தூக்கில் பிணமாக தொங்கினர். இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த உறவினர்கள், மரக்காணம் போலீசுக்கு தகவல் தெரிவித்தனர். உடனே போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து விசாரித்தனர்.

போலீசார் நடத்திய விசாரணையில், நேற்று முன்தினம் இரவு சாப்பிடும்போது, 'செல்போனில் அதிக நேரத்தை வீணாக்காதே' என்று கீர்த்திகாவை ஸ்ரீமதி கண்டித்துள்ளார். 10ம் வகுப்பு என்பதால் படிப்பில் கவனம் செலுத்துமாறு அறிவுரை கூறியுள்ளார். இதனால் விரக்தி அடைந்த கீர்த்திகா, வீட்டின் மாடியில் தூக்குப்போட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார். இதைப் பார்த்த ஸ்ரீமதி, தான் திட்டியதால் தான் கீர்த்திகா இறந்துவிட்டார் என்று கருதி அவரும் தற்கொலை செய்தது தெரியவந்தது.

இந்த சம்பவம் அந்த பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# அரியலூர் ரெயில் நிலையத்தில் புதிய டிஜிட்டல் கால அட்டவணை

அரியலூர் ஜூன் 27

அரியலூர் ரெயில் நிலையத்திற்கு தினமும் ஏராளமான பயணிகள் வந்து செல்கின்றனர். அரியலூர் மட்டுமின்றி பெரம்பலூர், தஞ்சாவூர், திருச்சி, பட்டுக்கோட்டை, கும்பகோணம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்தும் அதிகளவில் பயணிகள் வந்து செல்கின்றனர். பிற மாவட்டங்களில் இருந்து வேலை நிமித்தமாகவும், படிப்பு சம்பந்தமாகவும் அரியலூர் வருவதற்கு பெரும்பாலானவர்கள் ரெயிலையே பயன்படுத்துகின்றனர். ஆனால் இந்த ரெயில் நிலையத்திற்கு வரும் பயணிகளுக்கு ரெயில் வரும் நேரம், வண்டி எண் மற்றும் புறப்படும் நடைமேடை உள்ளிட்ட விவரங்களை அறிந்து கொள்ளும் வகையில் ரெயில்வே கால அட்டவணை வைக்கப்படாமல் இருந்தது. இதனால் இந்த ரெயில் நிலையத்திற்கு வரும் பயணிகள் அவதியடைந்தனர். இது தொடர்பாக பயணிகளின் கோரிக்கை குறித்து 'தினத்தந்தி' நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டது. இதைத்தொடர்ந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொண்டனர். அதன்படி 'டிஜிட்டல்' கால அட்டவணை அமைப்பதற்காக உயர் அதிகாரிகளிடம் ஒப்புதல் பெறப்பட்டது. மேலும் அரியலூர் ரெயில் நிலையத்தில் ரெயில் வரும் நேரம், வண்டி எண், புறப்படும் நடைமேடை உள்ளிட்ட விவரங்களை தெரிவிக்கும் வகையில் 2 'டிஜிட்டல்' கால அட்டவணைகள் வைக்கப்பட்டுள்ளன. அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் ரெயில் நிலையம் மேம்படுத்தப்பட்டாலும் கால அட்டவணை மட்டும் அமைக்கப்படாமல் இருந்தது. தற்போது இந்த 'டிஜிட்டல்' கால அட்டவணை வைக்கப்பட்டுள்ளதால் பயணிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இதற்கு நடவடிக்கை எடுத்த அதிகாரிகளுக்கும், செய்தி வெளியிட்ட 'தினத்தந்தி' நாளிதழுக்கும் அவர்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

27.6.2025

# பக்கெட் பிரியாணி சாப்பிட்ட 13 பேருக்கு வாந்தி மயக்கம் பிரபல தொப்பி வாப்பா பிரியாணி கடையின் உரிமம் ரத்து




தென்காசி ஜூன் 27

தென்காசி மாவட்டம், பாவூர்சத்திரம் பகுதியில் செயல்பட்டு வந்த தொப்பி வாப்பா என்கின்ற பிரபல பிரியாணி கடையில் கடந்த சனிக்கிழமை அன்று பக்கெட் பிரியாணி வாங்கி சாப்பிட்ட 13 பேருக்கு வாந்தி மயக்கம் ஏற்பட்ட நிலையில், அவர்கள் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு வீடு திரும்பினர்.

இந்த நிலையில், உணவு பாதுகாப்புத் துறையினர் முறையாக சோதனை செய்யாத காரணத்தினால் தான் இதுபோன்ற உணவுகள் ஹோட்டல்களில் வினியோகம் செய்யப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்த நிலையில், உணவு பாதுகாப்புத் துறையினர் அந்த கடையில் ஆய்வு மேற்கொண்டனர்.

அப்பொழுது, அந்த கடையானது தூய்மை இன்றி காணப்பட்ட நிலையில் கடையில் தூய்மை மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும், கடையில் உள்ள பணியாளர்களை மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டும் எனவும் கூறி கடை உரிமையாளருக்கு நோட்டீஸ் வழங்கிய நிலையில், கடையின் உரிமத்தையும் ரத்து செய்தும் உத்தரவு பிறப்பித்தனர்

குறிப்பாக, ஒரு பிரச்சினை எழுந்தவுடன் உணவு பாதுகாப்புத் துறை அதிகாரிகள் அந்த ஹோட்டலில் ஆய்வு மேற்கொண்ட நிலையில், இது போன்று தென்காசி மாவட்டத்தில் பல்வேறு ஹோட்டல்களில் தரம் இல்லாத உணவுகள் வினியோகம் செய்யப்படுவதாக குற்றச்சாட்டுகள் தொடர்ந்து எழுந்த வண்ணம் உள்ள நிலையில், உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் மாவட்டம் முழுவதும் உள்ள ஹோட்டல்களில் ஆய்வு நடத்தி தரம் இல்லாத உணவுகளை விநியோகம் செய்யும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஒட்டன்சத்திரத்தில் கல்லூரி மாணவிகள், காவல்துறையினர் இணைந்து நடத்திய போதை தடுப்பு விழிப்புணர்வு பேரணி






ஒட்டன்சத்திரம் ஜூன் 27

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சக்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவிகள் மற்றும் காவல் துறையினர் இணைந்து நடத்திய போதை தடுப்பு விழிப்புணர்வு பேரணி ஒட்டன்சத்திரம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் கார்த்திகேயன் தலைமையில் நடைபெற்றது.

இதில் போதைப் பழக்கத்தை கைவிட வேண்டும் என உறுதிமொழி ஏற்ற பின்பு ஒட்டன்சத்திரம் நகர முக்கிய வீதிகளில் போதை தடுப்பு வாசகங்களை கொண்ட பதாகைகளை ஏந்தி விழிப்புணர்வு கோஷங்களை எழுப்பி ஊர்வலமாக சென்றனர்.

இந்நிகழ்வில் காவல் ஆய்வாளர் தங்கராஜ், துணை ஆய்வாளர்கள், காவலர்கள் மற்றும் இரு கல்லூரி ஆசிரியர்கள் பேரணியில் கலந்து கொண்டனர். கலந்துகொண்ட கல்லூரி மாணவிகளுக்கு காவல் சார்பு ஆய்வாளர் சிவராஜா சிற்றுண்டிகள் வழங்கினார்.

# இன்றைய ராசி பலன்கள் (27.6.2025)

- **மேஷம்:** செயல்களில் நம்பிக்கை அதிகரிக்கும். பணம்: நிதி நிலை ஓரளவு மேம்படும். பணி: மேலதிக பொறுப்புகள் ஏற்படும்.
- **ரிஷபம்:** மனநிறைவு கூடும். பணம்: பழையபாக்கிகள்கிடைக்கும். பணி: தொழில் வளர்ச்சி சந்தோஷம் தரும்.
- **மிதுனம்:** மனச்சோர்வு ஏற்படலாம். பணம்: செலவுகள் கட்டுப்படுதல் தேவை. பணி: பணி சார் இடமாற்றம் சாத்தியம்.
- **கடகம்:** ஒளிமயமான நாள். பணம்: வருமானம் உயர்வு பெறும். பணி: புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகலாம். பரிந்துரை: திட்டமிடல் முக்கியம்.
- **சிம்மம்:** குடும்ப உறவுகள் பலப்படும். பணம்: பணவரவு திகரிக்கும். பணி: புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.
- **கன்னி:** ஒத்துழைப்பு வாய்ந்த நாள். பணம்: சேமிப்பை அதிகரிக்க இயலும். பணி: சக ஊழியர்களிடம் ஆதரவு கிடைக்கும்.
- **துலாம்:** புதிய முயற்சிகள் வெற்றியளிக்கும். பணம்: செலவுகள் சுமாராகவே இருக்கும். பணி: திட்டங்களை செயல்படுத்த நேரம் சரியாக உள்ளது.
- **விருச்சிகம்:** முக்கிய முடிவுகள் எடுக்கலாம். பணம்: வங்கிக் கடன் விடுவிக்க வாய்ப்பு. பணி:உயர்ந்தபதவிவாய்ப்பு.
- **தனுசு:** ஆன்மிக ஆழ்ச்சி ஏற்படும். பணம்: பங்குச் சந்தையில் லாபம் கிடைக்கும். பணி: சக ஊழியர்களுடன் நல்லிணக்கம்.
- **மகரம்:** உற்சாகம் குறைவாக இருக்கும். பணம்: தாமதமான பணவரவு. பணி: திட்டங்கள் மெதுவாக நகரும்.
- **கும்பம்:** நண்பர்களிடமிருந்து ஆதரவு கிடைக்கும். பணம்: பழைய சொத்துப் பிரச்சனை தீரும். பணி: விருப்பமான இடத்தில் வேலை வாய்ப்பு.
- **மீனம்:** நிம்மதி பெறும் நாள். பணம்: வருமானம் அதிகரிக்கும். பணி:கலைமற்றும்ஆராய்ச்சி தொடர்பான முன்னேற்றம்.

# க.புதுப்பட்டியில் சில்ட்ரன் சாரிடபிள் ட்ரஸ்ட் சார்பாக பெண்கள் வாழ்வாதாரம் மேம்பட உதவிகள்




கம்பம், ஜுன் 27

தேனி மாவட்டம் கம்பம் அருகே உள்ள க.புதுப்பட்டியில் சில்ட்ரன் சாரிடபிள் டிரஸ்ட் சார்பாக பெண்களின் வாழ்வாதாரம் மேம்படுவதற்காக பெதேர்ஸ் ஃபார் தி ஃபியூச்சர்ஸ் எனும் தலைப்பில் உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கமாக கோழியின் மூலம் நிலையான வாழ்வாதார ஆதரவு பெற வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு நடத்தப்பட்டது. இதில் சில்ட்ரன் சாரிடபிள் டிரஸ்ட் மாவட்ட நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் பேச்சியப்பன் வரவேற்புரை வழங்கினார். தொடர்ந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பத்து பெண்களுக்கு கோழி, சேவல் மற்றும் அதன் உபகரணங்கள் அனைத்தும் வழங்கப்பட்டது.

# கடைகளை காலிசெய்ய மேலும் ஒருவாரம் அவகாசம் பணிகள் தொடரும் என ஆனையாளர் உறுதி

குன்னூர் மார்க்கெட் கடைகளை 15 நாட்களுக்குள் காலிசெய்ய நோட்டீஸ் வழங்கிய குன்னூர் நகராட்சி அதிகாரிகள்குன்னூர்நகரமன்றதலைவர்துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று இன்று முதல் மேலும் ஒரு வாரம் கடைகளை காலி செய்ய கூடுதல் அவகாசம் வழங்கியது குன்னூர் நகராட்சி நிர்வாகம்




சர்வதேச போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு தினத்தினை முன்னிட்டு கடலூர், மஞ்சக்குப்பம் புனித வளனார் மேல்நிலைப் பள்ளியில் போதைப் பழக்கத்திற்கு எதிராக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பள்ளி மாணாக்கர்கள் பங்கேற்புடன் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

# பிரபல கிரிக்கெட் வீரருடன் காதலா?.. மனம் திறந்த ஈஷா குப்தா



இது குறித்து நடிகை ஈஷா குப்தா அளித்த பேட்டியில், "2018ம் ஆண்டு ஒரு விருந்து நிகழ்ச்சியில் இருவரும் சந்தித்தோம். பின்னர் நாங்கள் 2 மாதங்களாக பழகிக் கொண்டு இருந்தோம். ஆனால் டேட்டிங் செய்யவில்லை. நாங்கள் டேட்டிங் கட்டத்தை அடைவதற்கு முன்பே உறவு முடிந்து விட்டது. எனவே அது டேட்டிங் அல்ல. நாங்கள் போதுமான இணக்கத்தில் இல்லை என்பதை உணர்ந்தோம். இதையடுத்து அவர் என்னுடையவர் அல்ல என்பதை நான் உணர்ந்தேன். இவ்வாறு அவர் கூறினார்.

ஹர்திக் பாண்டியா, நடிகை நடாஷா ஸ்டான்கோவிக்கை கடந்த 2020ம் ஆண்டு காதல் திருமணம் செய்திருந்தார். இவர்களுக்கு அகஸ்தியா என்ற மகன் இருக்கிறார். இருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு கடந்த ஆண்டு விவாகரத்து பெற்றனர்.

# தயாரிப்பாளராக அவதாரம் எடுத்த 'ஜன நாயகன்' பட இயக்குனர்

''சதுரங்க வேட்டை'' படத்தின் மூலம் இயக்குனராக தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் எச். வினோத். இவர்இயக்கியமுதல்படமேரசிகர்கள்மத்தியில்நல்லவரவேற்பைபெற்றது. அதைதொடர்ந்து, ''நேர்கொண்ட பார்வை'', ''வலிமை'', ''துணிவு, ''தீரன் அதிகாரம் ஒன்று'' போன்ற நல்ல படங்களை கொடுத்து சினிமாவில் பிரபலமானார்.

தற்போது இவர் விஜய்யின் ''ஜனநாயகன்'' படத்தை இயக்கி வருகிறார். இது விஜய்யின் கடைசி படம் என்பதால் மிகப்பெரிய எதிர்பார்ப்பு உள்ளது. இப்படம் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 9ம் தேதி வெளியாக உள்ளது.

இதற்கிடையில், இயக்குனர் எச்.வினோத் புதிய பட தயாரிப்பு நிறுவனத்தை தொடங்கி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இயக்குனர்கள் லோகேஷ் கனகராஜ், நெல்சன் திலீப் குமாரை தொடர்ந்து இவரும் தயாரிப்பு நிறுவனத்தை தொடங்கி உள்ளது வரவேற்க தக்க விஷயமாகும். இவர் தயாரிப்பில் உருவாகும் முதல் படத்தை 'மகளிர் மட்டும்' பட இயக்குனர் பிரம்மா இயக்க உள்ளதாகவும், திரைக்கதையை வினோத் எழுத உள்ளதாகவும் கூறப்படுகிறது. விரைவில் இது குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# 'கூலி' படத்திலிருந்து 'சிக்கிட்டு' பாடல் வெளியீடு




'சூப்பர்ஸ்டார்' ரஜினிகாந்த் 'வேட்டையன்' படத்தின் வெற்றிப்பிறகு லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் 'கூலி' படத்தில் நடித்து முடித்துள்ளார். இந்த படத்தில் நாகார்ஜுனா, உபேந்திரா, சோபின் சாஹிர், சத்யராஜ், சுருதிஹாசன் என நட்சத்திர பட்டாளங்களே நடித்துள்ளனர். மேலும் கேமியோ ரோலில் பாலிவுட் நடிகர் அமீர்கான் நடித்துள்ளார். இப்படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். நடிகை பூஜாஹெக்டே சிறப்பு பாடல் ஒன்றில் நடனமாடியுள்ளார். இந்த படத்தின் படப்பிடிப்பு பணிகள் நிறைவடைந்த நிலையில், தற்போது இதன் போஸ்ட் புரொடக்சன் வேலைகள் நடைபெற்று வருகின்றன. தங்க கடத்தலை மையமாக கொண்டு உருவாகப்பட்டுள்ள, இப்படம் வருகிற ஆகஸ்ட் 14ந் தேதி வெளியாக உள்ளது. இந்த நிலையில், இப்படத்தின் முதல் பாடலான 'சிக்கிட்டு' என்ற பாடல் வெளியாகி உள்ளது. இந்த பாடலை அறிவு, அனிருத், டி.ராஜேந்தர் ஆகியோர் இணைந்து பாடியுள்ளனர். பாடல் வரிகளை அறிவு எழுதியுள்ளார். இந்த பாடல் இணையத்தில் வைரலாகி வருகிறது.


# ரூ.100 கோடி வசூல் செய்த குபேரா படம்.. படக்குழு அதிகாரபூர்வ அறிவிப்பு

தனுஷ், நாகார்ஜுனா மற்றும் ராஷ்மிகா மந்தனா நடித்த ''குபேரா'' படம், இந்த ஆண்டின் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட படங்களில் ஒன்றாகும். நேற்றுமுன்தினம் வெளியான 'குபேரா' படம் கதை ரீதியாக நல்ல விமர்சனங்களையும், திரைக்கதை ரீதியாக கலவையான விமர்சனங்களையும் பெற்று வருகிறது.

இப்படத்தில் தனுஷின் நடிப்புக்கு ரசிகர்கள் மற்றும் விமர்சகர்களிடமிருந்து பாராட்டு குவிந்து வருகிறது. தெலுங்கு திரையுலகில் முன்னணி இயக்குநர்களில் ஒருவரான சேகர் கம்முலா இயக்கிய இப்படத்திற்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைத்துள்ளார்.

இந்த நிலையில், குபேரா படத்தின் வசூல் குறித்த விவரம் வெளியாகி உள்ளது. அதன்படி, இப்படம் ரூ.100 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்துள்ளதாக படக்குழு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. படம் நல்ல வரவேற்பை பெற்று வருவதால் படத்தின் வசூல் மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# கிளப் உலகக் கோப்பை கால்பந்து: செல்சி அணி வெற்றி



கிளப் அணிகளுக்கான 21வது உலகக் கோப்பை கால்பந்து போட்டி அமெரிக்காவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 32 அணிகள் 8 பிரிவாக பிரிக்கப்பட்டு மோதுகின்றன. லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் டாப்2 இடங்களை பிடிக்கும் அணிகள் 'நாக்அவுட்' சுற்றுக்கு முன்னேறும். இந்த நிலையில், இந்திய நேரப்படி 'டி' பிரிவில் நடந்த ஒரு ஆட்டத்தில் செல்சி (இங்கிலாந்து ) எஸ்பெரன்ஸ் துனிஸ் (துனிசியா ) அணிகள் மோதின. பரபரப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய செல்சி அணி 3-0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது.

# ஆஸ்ட்ராவா கோல்டன் ஸ்பைக்: சாம்பியன் பட்டம் வென்று நீரஜ் சோப்ரா அசத்தல்




'ஆஸ்ட்ராவா கோல்டன் ஸ்பைக்' சர்வதேச தடகள போட்டி செக் குடியரசு நாட்டில் நடைபெற்றது. இதில் ஈட்டி எறிதல் போட்டியில் இந்தியாவின் நட்சத்திர வீரரும் பாரிஸ், டைமண்ட் லீக் போட்டிகளில் பதக்கம் வென்றவருமான நீரஜ் சோப்ரா கலந்து கொண்டார்.

இப்போட்டியில் நீரஜ் சோப்ரா முதல் வாய்ப்பில் பவுல் செய்தார். இரண்டாவது வாய்ப்பியில் 83.45 மீட்டர் தூரம் வரை ஈட்டியை எறிந்தார். மூன்றாவது வாய்ப்பில் 85.29 மீட்டர் தூரத்திலும்( நீரஜ் சோப்ரா சிறந்த நிலையான 90.23 மீட்டர்), நான்காவது வாய்ப்பில் 82.17 மீட்டர் தூரத்திலும் ஐந்தாவது வாய்ப்பில் 81.01 மீட்டர் தூரத்திலும் எறிந்த நீரஜ் சோப்ரா இறுதி வாய்ப்பில் பவுல் செய்தார்.

இதன் மூலம் மற்றவர்களைவிட அதிகபட்சமாக மூன்றாவது வாய்ப்பில் 85.29 மீட்டர் எறிந்த இவர், முதலிடம் பிடித்து தங்கம் வென்று அசத்தினார். அதே போல் 6 வாய்ப்புகளில் 2 வாய்ப்புகளை தவறவிட்ட தென்ஆப்ரிக்கா நாட்டைச் சேர்ந்த தவ் ஸ்மித் அதிகபட்சமாக 84.48 மீட்டர் தூரத்திற்கு ஈட்டியை எறிந்து இரண்டாவது இடத்தை பிடித்தார்.

இவரைத்தொடர்ந்து கிரெனடா நாட்டைச் சேர்ந்த ஆண்டர்சன் பீட்டர்ஸ் அனைத்து வாய்ப்புகளை சரியாக பயன்படுத்தினார். இருப்பினும் 83.63 மீட்டர் தூரத்திற்கு ஈட்டியை எறிந்து மூன்றாம் இடத்தை பிடித்தார்.

# கிளப் உலகக் கோப்பை கால்பந்து: இன்டர் மியாமி அணி அடுத்த சுற்றுக்கு தகுதி

32 அணிகள் பங்கேற்றுள்ள கிளப் அணிகளுக்கான 21வது உலகக் கோப்பை கால்பந்து போட்டி அமெரிக்காவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் நேற்று முன்தினம் இரவு 'ஏ' பிரிவில் நடந்த ஆட்டம் ஒன்றில் இன்டர் மியாமி (அமெரிக்கா)பால்மிராஸ் (பிரேசில்) அணிகள் மோதின.

விறுவிறுப்பான இந்த ஆட்டம் 22 என்ற கோல் கணக்கில் டிராவில் முடிந்தது. டாடோ ஆலென்டி (16வது நிமிடம்), லூயிஸ் சுவாரஸ் (65வது நிமிடம்) ஆகியோரின் கோலால் இன்டர் மியாமி அணி 20 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. ஆனால் கடைசி நேரத்தில் பால்மிராஸ் வீரர்கள் பாலின்ஹோ (80வது நிமிடம்) மவுரிசியோ (87வது நிமிடம்) ஆகியோர் அடித்த கோலால் அந்த அணி சரிவில் இருந்து மீண்டு டிரா கண்டது.

இதே பிரிவில் நடந்த போர்டோ (போர்ச்சுகல்)அல் அலி (எகிப்து) அணிகள் இடையிலான ஆட்டம் 44 என்ற கோல் கணக்கில் டிரா ஆனது. லீக் முடிவில் பால்மிராஸ், இன்டர் மியாமி (தலா 5 புள்ளி) அணிகள் முறையே முதல் 2 இடங்களை பிடித்து நாக்அவுட் (ரவுண்ட் 16) சுற்றுக்கு முன்னேறின.

நாக்அவுட் சுற்றில் பால்மிராஸ் அணி, போடாபோகோவையும் (பிரேசில்), இன்டர் மியாமி, பாரீஸ் செயின்ட் ஜெர்மைனையும் (பிரான்ஸ்) எதிர்கொள்கிறது.

முன்னதாக 'பி' பிரிவில் நடந்த ஆட்டங்களில் பாரீஸ் செயின்ட் ஜெர்மைன் (பிரான்ஸ்) அணி 20 என்ற கோல் கணக்கில் சியட்டி சவுன்டெர்ஸ் எப்.சி.யையும் (அமெரிக்கா), அட்லெட்டிகோ மாட்ரிட் (ஸ்பெயின்) 10 என்ற கோல் கணக்கில் போடாபோகோவையும் (பிரேசில்) வீழ்த்தியது.

லீக் முடிவில் பாரீஸ் செயின்ட் ஜெர்மைன், போடாபோகோ, அட்லெட்டிகோ மாட்ரிட் அணிகள் தலா 6 புள்ளிகளுடன் சமநிலை வகித்தாலும், கோல் வித்தியாசத்தின் அடிப்படையில் பாரீஸ் செயின்ட் ஜெர்மைன், போடாபோகோ அணிகள் டாப்2 இடங்களை உறுதி செய்து அடுத்த சுற்றுக்குள் நுழைந்தன.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.